ஓம்

# திருவாதவூரடிகள் வரலாற்றுச்சுருக்கம்

உ

## வினாக்களும் - விடைகளும்

(மாணவர்களுக்கு உகந்தது)



வெளியீடு:

**பாலர் ஞானோதய சபை**

காசிவிநாயகர் தேவஸ்தானம்

தெல்லிப்பழை.

04 - 02 - 1990.

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

# திருவாதவூரடிகள் வரலாற்றுச்சுருக்கம்
# வினாக்களும் - விடைகளும்

(மாணவர்களுக்கு உகந்தது)


ஆக்கம்:

(பிரதம சிவாச்சாரியார்)

சிவஸ்ரீ சிவகடாக்ஷ கணேசலிங்கக் குருக்கள் அவர்கள்



வெளியீடு:

**பாலர் ஞானோதய சபை**

காசிவிநாயகர் தேவஸ்தானம்

தெல்லிப்பழை.

04 - 02 - 1990.

வெளியீடு- 12 விலை: 20-00 ரூபா



மாணிக்கவாசக சுவாமிகள்

உ

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக

இந்துநாகரிகத்துறைத் தலைவர்

## கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் அவர்கள்

வழங்கிய

# அணிந்துரை

தெல்லிப்பளை காசி விநாயகர் தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் இயங்கிவரும் பாலர் ஞானோதயசபை பாலர்களின் அடிப்படைச் சமய அறிவினை வளர்க்கும் நோக்குடன் காலத்துக்குக் காலம் பல நூல்களை வெளியிட்டுவருவது பாராட்டத்தகுந்த தொண்டாகும். சைவச் சிறுர்கள் சிறுவயதிலிருந்தே தமது சமய அறிவினை விருத்தி செய்வதற்கு மாத்திரமன்றி சைவ வாழ்க்கை வாழ்வதற்கும் இத்தகைய நூல்கள் பெரிதும் உதவுகின்றன.

இவ்வாலயத்தின் பிரதம குருவாகிய சிவஸ்ரீ சிவகடாட்ச கணேசலிங்கக் குருக்கள் அவர்கள் சைவச் சிறுர்களுக்குரிய இத்தகைய நூல்களை எழுதி வெளியிடும் பணியில் முழுமையாக ஈடுபட்டு வந்துள்ளமை பாராட்டுக்குரியதாகும். பாலர் ஞானோதய சபையின் பன்னிரண்டாவது வெளியீடாக வரும் இத் தொகுப்பு நூலில் காப்புச் செய்யுள் மற்றும் இறை வணக்கப் பாடல்களும், திருக்குறள் பத்து அதிகாரங்களும், திருவாதவூரடிகள் புராணத்திலே வாதவூரரின் பத்திச் சிறப்பும், சித்தாந்த தத்துவங்களும் நான்கு பாதங்களின் விளக்கங்களும், முத்திநிலைபற்றிய விளக்கமும் சிறப்பாக இடம்பெற்றுள்ளன. சைவ சமயம் சார்ந்தோருக்கு இந்தப் புராணம் அரியதொரு வழி காட்டியும் பொக்கிஷமுமாகும். இளம் சிறுர்கள் திருவாதவூரடிகளின் புராணக் கருத்துக்களை நன்கு விளங்குவதற்கேற்ற வினு விடை வடிவில் இந்நூல் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். சமய நம்பிக்கையையும் அறிவையும் மேம்படுத்தவல்ல இந்நூலை எளிமையான நடையில் தொகுத்தளிக்கும் குருக்கள் அவர்களின் சீரிய பணியினைச் சைவ உலகம் வரவேற்குமென்பது திண்ணம்.

பாலர் ஞானோதய சபை குருக்கள் அவர்களுக்குப் பக்கபலமாக விளங்கி வருகின்றது. பாலர் ஞானோதய சபையினதும் குருக்கள் அவர்களினதும் சமயத்துறை சார்ந்த இப் பணி மேன் மேலும் சைவ உலகத்திற்குக் கிட்டும்வண்ணம் எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் திருவருளை வேண்டுகின்ருேம்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

ப. கோபாலகிருஸ்ணன்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர்

# திருமதி. கலாதேவி பொன்னம்பலம்

M.A ,Dip-in-Ed.

வழங்கிய

# சிறப்புரை

பாண்டிநாட்டு மதுரையம்பதியிலே முழுமுதற் கடவுளாகிய சோமசுந்தரக் கடவுள் செய்தருளிய அற்புதமான அறுபத்துநான்கு திருவிளையாடல்களை எடுத்துக் கூறுவது திருவிளையாடற் புராணம். பெரும்பற்றப்புலியூர் நம்பி என்பவரால் இயற்றப்பெற்ற திருவால வாயுடையார் திருவிளையாடற் புராணம், பழைய திருவிளையாடல் எனவும் வழங்கும். பரஞ்சோதிமுனிவரின் திருவிளையாடற் புரா ணமே இன்று பெருவழக்கில் உள்ளது. இதன் திருவாலவாய்க் காண்டத்தில் வாதவூரடிகளுக்கு உபதேசித்த படலம், நரி பரியாக் கிய படலம், பரி நரியாக்கி வையைநதியை அழைத்தபடலம் என் பவற்றில் வாதவூரடிகளுக்காக நிகழ்த்திய திருவிளையாடல்கள் விபரிக்கப்பட்டுள்ளன. இதனையொட்டியே கடவுள்மாமுனிவர் திருவாதவூரடிகள் புராணத்தை இயற்றியுள்ளார். திருவாதவூ ரடிகள் புராணம் காப்பு, பாயிரம், மந்திரிச் சருக்கம், திருப் பெருந்துறைச் சருக்கம், குதிரையிட்ட சருக்கம், மண்சுமந்த சருக் கம், திருவம்பலச் சருக்கம், புத்தரை வாதில் வென்ற சருக்கம், திருவடி பெற்ற சருக்கம் என எட்டுப் பகுதிகளைக்கொண்ட ஐந் நூற்று நாற்பத்தைந்து திருவிருத்தங்களால் ஆனது.

தெல்லியூர் சிவஸ்ரீ சி. கணேசலிங்கக் குருக்கள்அவர்கள் சைவத் தைப் பேணி வளர்ப்பதில் நாவலர் பரம்பரையைச் சார்ந்தவர். நாவலர் வழியைப் பின்பற்றி 'வினு - விடை'கள் மூலம் மாணிக்க வாசக சுவாமிகளது திவ்விய வரலாற்றை மாணவருக்கு அறியத் தருகின்றார். வினு - விடை முறை வேதஉபநிடதங்களிலே காணப் படுகின்றது. இளஞ் சிறார் மனதில் பசுமரத்தாணிபோல் பதியக் கூடிய முறையில் இடையிடையே புராணத் திருவிருத்தங்களையும் புகுத்திச் செவ்விய வசன நடையில் அமைத்திருக்கிறார்கள். திரு வாதவூரருக்கு ஞானசிரியர் தீட்சை அளித்த முறை, செம்மனச் செல்விக்காக கூலியாளராகச் சிவபெருமான் வந்து வைகைக் கரையை அடைத்த விதம், புத்தகுருவுடன் சமயவாதம் செய்த முறை என்பன மனங் கொளத் தக்க முறையில் வினுவிடை மூலம் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. வினுவிடை முழுவதையும் படித்த போது திருவாதவூரடிகளின் வரலாற்றை முழுமையாக அறிந்த நிறைவு ஏற்படுகின்றது,

பாலர் ஞானோதய சபை ஸ்தாபகர் சிவஸ்ரீ மு. சிவகடாக்ஷக் குருக்கள் புன்னாலைக்கட்டுவன் சிவஸ்ரீ இ. முத்துக்குமாரசுவாமி ஐயர் அவர்களின் புத்திரன். திரிபாஷாபண்டிதர் எனப் பாராட்

டப்பெற்ற முத்துக்குமாரசுவாமி ஐயர் ஆசிரியராகவும் கடமை யாற்றியவர். அவரைத் தொடர்ந்து அவர் மைந்தனும், அவரைத் தொடர்ந்து அவரது மைந்தன் இந் நூலாசிரியரும் வழி வழியா கக் கோயிற் பூசையுடன் நின்றுவிடாது சமய வகுப்புக்களை நடாத் தியும் அரிய கட்டுரைகளைப்பத்திரிகைகளில் வெளியிட்டும் வருகிறார்.

பாலர் ஞானோதய சபை ஸ்தாபகர் சிவஸ்ரீ மு.சிவகடாக்ஷக் குருக்கள், இந்நூலாசிரியர் ஆகியோரிடம் காசி விநாயகப் பெரு மான் ஆலயச் சூழலில் சமயக்கல்வி கற்கும் வாய்ப்பை இளம் வயதில் பெற்ற பெரும் பாக்கியம் அடியேனுக்கும் உண்டு. நாற் பத்து மூன்றாண்டுகளாக தொடர்ந்து பணியாற்றி வரும் பாலர் ஞானோதய சபையின் சமய வகுப்பின் ஸ்தாபகரும், இந்நூலாசிரி ரும் தொடர்ந்து நடத்தி வந்திருக்கிறார்கள். தெல்லிப்பழைச் சூழ லில் சைவசமய உணர்வும், சைவத்தமிழ்ப் பண்பாடும், பேணப்ப டுவதற்கு வித்திட்டவர்கள் இவர்களென்றால் அது மிகையாகாது.

பாலர் ஞானோதய சபையினர் சமய வகுப்புக்களுடன் மிருதங் கம், வயலின், வாய்ப்பாட்டு தேவாரப்பண்ணிசை என்பவற்றை யும் தகுதி வாய்ந்த ஆசிரியர்களைக் கொண்டு நடாத்தி வருகின்ற னர். இவ்வகையில் ஆலயச்சூழல் கலை, கலாச்சார வளர்ச் சிக்கும் அருந்தொண்டாற்றி வருகிறது. ஆண்டு தோறும் தைமாதத் தில் ஆண்டுவிழாக் கொண்டாடும் பொழுது மாணவர் எல்லோ ரும் நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதுடன் எல்லோரும் பரிசில்களையும் பெறுவது இங்கு பேணப்படும் இன்னொரு சிறப்பம்சமாகும்.

பெரியபுராண வசனச் சுருக்கம் முதல் வெளியீடாக வந்தது. 12வது வெளியீடு மாணிக்கவாசக சுவாமிகளது வரலாற்றைக் கூறு கிறது. இவ்வகையில் சமயகுரவர்கள் பற்றி மிக இலகுவாக மாண வர் அறியக்கூடியதாக நூலாசிரியர் செய்துள்ளார். இவ்வாறே சந்தான குரவர்பற்றி அறிவதற்கும் வினா - விடைகள் எழுதி வெளியிடின் சைவச்சிறார்கள் பெரிதும் பயனடைவார்கள். பாலர் ஞானோதயசபை பழைய மாணவர்கள் சமய நெறிவழு வாது, வாழ்வதுடன் குருக்கள் ஐயா அவர்களின் பணிக்கும் உறு துணையாக உதவுகிறார்கள். பலருள்ளும் குறிப்பாக காரியதரிசி ந.சிவபாலகணேசன் B.A.(Hons) அவர்கள் " நூல் வெளியீடு " செய்வதில் மிக்க ஆர்வத்துடன் செயற்பட்டு வருவதைப் பாராட் டாமல் இருக்கமுடியாது. எம் அன்புக்கும் மரியாதைக்கும் உரிய நூலாசிரியர் சைவசமயப் பணி தொடர காசி விநாயகப் பெரு மான் திருவடிகளை வழுத்துகின்றோம்.

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்"

திருமதி : கலாதேவி பொன்னம்பலம்

# என்னுரை

எமது சபையின் பன்னிரண்டாவது வெளியீடாக இச்சிறு நூல் வெளிவருகின்றது. இந்நூலில் திருக்குறள் பத்து அதிகாரமும் (100 பாட்டு) சேர்க்கப்பட்டுள்ளது. திருவாதவூரடிகள் புராணம் ஆண்டு தோறும் திருவெம்பாவைக் காலங்களில் சைவ ஆலயங்களில் படித்துப் பொருள் சொல்லும் மரபுடையது. மேற்படி புராணத்தில் சித்தாந்த தத்துவங்களும், நான்கு பாதங்களின் தன்மைகளும், நால்வகை முத்தி நிலைகளும் மிகவும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. இப்புராணம் சைவ சமயத்தவர்கட்குத், தேடக்கிடையாத அரிய பொக்கிஷம் என்று கூறின் அது மிகையில்லை.

கடவுள்மா முனிவரால் அருளப்பட்ட இந்நூலைச் சைவத்தமிழ் அறிவு கைவரப்பெற்றவர்களே கற்று உணரமுடியும். இன்று சமயத்தைக்கற்கும் மாணவர்கள் போதியளவு தமிழறிவு இல்லாத காரணத்தால் திருவாதவூரடிகளது வரலாற்றை அறியமுடியா திருக்கின்றது. இதற்கு வகை செய்யும் நோக்குடன் வாதவூர்ப் பெருமானின் வரலாற்றை மிகச்சுருக்கமாக ஒரு கைநூல் 4, 5. 85 ல் வெளியிட்டோம். அதனை ஆதாரமாக் கொண்டும் சிலவிடயங்களை விரிவு படுத்தி இவ் வினா — விடைகளின் தொகுதியை ஆக்கியுள்ளோம். சைவசமயக் கல்வி கற்கும் மாணவர்கள் ஒரு பொதுக் கண்ணோட்டத்தில் திருவாதவூரடிகளது திருச்சரிதையை அறிய இந்த வினா — விடைகள் வகை செய்யும் என்பது எமது நம்பிக்கை. இது போன்ற நூல்களை எமது சபை மாணவர்கள் மிகவும் உவந்து வரவேற்றுப் படிப்பது கண்டு எமக்கு ஆத்மதிருப்தி ஏற்படக் கூடிய தாகவுள்ளது. அதனோடு அமையாது — அப்பிள்ளைகளது அன்புப் பெற்றோர்களும் கூ சபையின் முன்னாள் மாணவர்களும் நல்லாதரவு நல்கிக் கொண்டிருப்பதும் காணக்கூடியதாகவுள்ளது. இதனால் இத்துறையில் உழைக்க எம்மால் முடிகின்றது. ஆகவே அறிஞர் பெருமக்கள் குற்றம் நீக்கிக்குணம் காண்பார்களாக, நூல் ஆக்கத்திற்கு உறுதுணை புரிந்த அனைவருக்கும் காசிஐங்கரன் திருவருள் பாலிப்பாராக.

சி. கணேசலிங்கக்குருக்கள்.

ஓம்

# பாலர் ஞானோதய சபையின் பன்னிரண்டாவது வெளியீடு.



எங்கள் காசிவிநாயகர் தேவஸ்தானத்தில் 1946ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டுப் பல்கிப் பெருகி வளரும் பாலர் ஞானோதய சபையின் அதிகௌரவத்துக்குரிய எங்கள் அன்புத்தலைவர் சிவஸ்ரீ சி. கணேசலிங்கக் குருக்கள் அவர்கள் — சிறுர்களின் சமய — கல்வி வளர்ச்சியைத், தம் அச்சாகக் கொண்டு ஆற்றிவரும் எழுத்துப்பணிகளுக்குச், சபை என்றென்றும் நன்றிக் கடப்பாடுடையவர்களாகவுள்ளோம்.

சைவசமயத்தவர்கள் போற்றும் தலைசிறந்த புராணங்களுள் — திருவாதவூரடிகள் புராணம் இனிமையும் பக்திச்சுவையும் நிறைந்தது என்பது யாவரும் அறிந்ததே. இச்சரிதத்தை — விஞ — விடை ரூபகத்தில் — குருக்கள் ஐயா ஆக்கியுள்ளார்கள். இந்நூலைப்படிக்கும் போது — மூலநூலைப் படிக்கவேண்டும் என்னும் ஆர்வத்தைத் தூண்டும் என்பது வெள்ளிடை. பல அரிய சித்தாந்த உண்மைகள் நிறைந்துள்ள இந்நூலை உங்கள் முன் வைப்பதில் பெருவிருப்புடையோம்.

எவ்வாறு முந்திய வெளியீடுகளுக்கு ஆதரவு நல்கியுள்ளீர்களோ அவ்வாறு எங்கள் சபையின் பன்னிரண்டாவது வெளியீட்டையும் ஆதரிப்பீர்கள் என எதிர்பார்க்கின்றேம்.

சைவசமயம் சார்ந்த புராணங்களும் — வரலாறுகளும் சிறபாக வெளிவரவேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டவரும் இந்து சமயவளர்ச்சிக்கு இணையற்ற பணியாற்றி வருபவருமாகிய யாழ்ப்பாணம் — இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் அவர்கள் இந்நூலுக்கு அணிந்துரை அளித்து அணிகலன் செய்துள்ளார்கள். நம் சபையின் முன்னுள் மாணவியும் இன்று சபையின் வளர்ச்சிக்கு முன்னின்று உழைத்து வருபவருமாகிய கோப்பாய் — ஆசிரியகலாசாலை விரிவுரையாளர் திருமதி. கலாதேவி பொன்னம்பலம் M. A. அவர்கள் இந்நூலுக்குச் சிறப்புரை வழங்கிச், சிறப்பித்துள்ளர்கள். அறிஞர் பெருமக்கள் நமது வேண்டு

கோஷ ஏற்றுத்தமது சிரமங்களையும் பொருட்படுத்தாது இத்தகைய மேலான உரைகளை வழங்கியுள்ளார்கள். இவர்களுக்குக், காசி விநாயகப்பெருமான் என்றென்றும் திருவருள் பாலிக்கவேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம். அத்துடன் யானும் சபை நிர்வாகத்தினரும் எமது அன்பான நன்றியறிதலைச் செலுத்துகின்றோம்.

இந்நூல் வெளிவருவதற்கு உறுதுணை புரிந்த இந்து சாதன ஆசிரியர் நம. சிவப்பிரகாசம் ஐயா அவர்கட்கும் பிரதிகளை ஒப்பு நோக்கி உதவிய சபையின் பாதுகாவலர் ம. சி. சிதம்பரப்பிள்ளை அவர்கட்கும் சபையின் நன்றியும் வணக்கமும் உரித்தாகுக.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினரால் நடாத்தப்படுவது சைவப்பிரகாச அச்சகம். இந்த அச்சகத்தில் முன் பல சமயநூல்கள் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளன. நாம் இந்நூலை அழகாகவும், பிழைகள் அற்றதாகவும் வெளியிட வேண்டுமென இவ்வச்சகத்தை நாடியபோது இதன் முகாமையாளர் சி. சர்வேஸ்வரன் அவர்கள் நமது எண்ணங்களுக் கெல்லாம் செவிமடுத்து அச்சேற்றி நூலாக்கம் செய்துள்ளார்கள். அன்னாருக்கும், தொண்டர்களாக உழைப்பவர்கட்கும் ஏனைய ஊழியர்கட்கும் சபை தனது நன்றியைச் செலுத்துகின்றது.

ந. சிவபாலகணேசன்
(B.A. Hons)
கௌரவசெயலாளர்

காசிவிநாயகர் தேவஸ்தானம்
பாலர் ஞானோதயசபை
தெல்லிப்பழை.
25-11-89



# திருமுறை ஆசிரியர்கள்



திருமுறை ஆசிரியர்கள்

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

# திருவாதவூரடிகள் புராண வரலாற்றுச் சுருக்கம்

# வினாக்களும் விடைகளும்

(மாணவர்களுக்கு ஏற்ற வகையில் சுருக்கி எழுதப்பட்டது.)

## காப்பு

பவளமால் வரையில் நிலவெறிப் பதுபோற்
பரந்தநீற் றழகு பச்சுடம்பிற்
திவளமா துடன்நின்று ஆடிய பரமன்
சிறுவனைப் பாரதப் பெரும் போர்
தவளமா மருப்பொன்று ஒடித்தொரு கரத்திற்
தரித்துயர் கிரிப்புறத் தெழுதும்
கவளமா களிற்றின் திருமுகம் படைத்த
கடவுளை நினைந்துகை தொழுவாம்.

**இதன் பொருள்:**

பெரிய பவளமலையின் கண்ணே சந்திரிகை பிரகாசிப்பது போன்று செம்பவளத் திருமேனியிலே பரவப் பூசிய வெண்மையாகிய விபூதியினது கோலமானது உமையம்மையினது பசுமையாகிய திருமேனியிலே துவளா நிற்ப, அவ்வம்மையுடனின்று திருநடனஞ் செய்தருளுகின்ற சிவபெருமானுடைய திருக்குமாரரை வெண்மையாகிய பெரிய ஒரு திருக்கொம்பை முறித்து ஒரு திருக்கரத்திலே எழுத்தாணியாகக் கொண்டு மகாபாரத யுத்த சரித்திரத்தை உயர்ந்த மேருகிரியாகிய, ஏட்டின் கண்ணே எழுதியருளிய கவளவுணவையுடைய கரிய களிற்றியானையினது திருமுகத்தையுடைய விநாயகக் கடவுளை - யாம் ஈண்டு எடுத்துக் கொண்ட இலக்கியம் இடையூறின்றி இனிது முடியும் பொருட்டு மனத்தினாலே தியானித்துக் கைகளினாலே அஞ்சலி செய்வாம் என்றவாறு. (க.வே.)

## பாயிரம்

இதந்தரு மடந்தையொடு இயைந்துயிர் உடம்புபோல்
விதம்படு உலகங்களில் விரிந்தொளி விளங்குவார்
மதங்கமொடு துந்துபி வளங்கெழ முழங்கவே
சிதம்பர நடம்பயில் செழுங்கழல் இறைஞ்சுவாம்.

பொருள்:

ஆன்மாக்கட்கு இன்பத்தைத் தருஞ் சிவகாமியம்மையோடு கூடிப் பலவகைப்பட்ட உலகங்களில் எல்லாம் உடம்பின்கண் உயிர் போல வியாபித்து நின்று அறிவுருவாய் விளங்குஞ் சபாநாயகரது மிருதங்கத்தோடு தேவதுந்துபிகள் வளம் பொருந்தி ஒலிக்கச் சிதம்பரத்தின் கண்ணே திருநடனஞ் செய்தருளுகின்ற செழுமையாகிய திருவடிகளை வணங்குவாம். (க. வே.)

## சிவகாமியம்மை

ஆடக சிதம்பர அணங்குமை அணங்கிலா
நாடகன் அனந்தசுகம் நன்குபுனை பங்கினுள்
ஏடக மணம் பொருவ எங்கணும் இயைந்துளாள்
பாடகம் இலங்குசிறு பங்கயம் இறைஞ்சுவாம்.

பொருள்:

மலரின் கண்ணே மணம் போல உலகெங்கும் வியாபித்து நிற்பவரும், உள்ளவாறே தரிசித்த ஆன்மாக்களுக்குப், பிறவித் துன்பத்தை இன்மை செய்யும் திருநடனத்தையுடைய சபாநாயகரது வரம்பிலின்பத்தை இனிதாக அனுபவிக்கும் (அவரது) வாமபாகத்தையுடையவரும், சிதம்பரத்தின்கண் உள்ள கனகசபையிலே நிருத்த சாகரியாக நின்றருளுபவருமாகிய அழகையுடைய சிவகாமியம்மையினது, வேதமாகிய பாத கடகங்கள் விளங்குஞ் சிறிய திருவடித் தாமரைகளை யாம் வணங்குவாம். (க. வே.)

## சுப்பிரமணியக் கடவுள்

துங்கமத கும்பவுயர் தும்பிமுகர் தம்பிசீர்
தங்குநெகி ழுஞ்சிறு சதங்கைகள் புலம்பவே
மங்கையுமை கண்குளிர வந்துலவு கின்றதாள்
அங்கைமலர் கொண்டுமிகும் அன்புடன் இறைஞ்சுவாம்.

பொருள்:

சுத்தமாகிய மதம் பில்கும் உயர்ந்த மத்தகத்தையும் யானைமுகத்தையும் உடைய விநாயகக் கடவுளுக்குத் தம்பியாகிய சுப்பிரமணியக் கடவுளது அழகிய சிலம்புகளும் சிறுசதங்கைகளும் சத்திக்கவும், நித்திய கன்னிகையாகிய உமையம்மையினது திருக்கண்குளிரவும் அங்கைமலர் கொண்டு மிகும் அன்புடன் யாம் வணங்குவாம். (க. வே.)

## நூற்பயன்

இந்தவள நற்கதை யியம்பினர் நயந்தே
சிந்தையி னினைப்பவர் செவிப்புல நிறைப்போர்
புந்திமகி ழப்புவிபுரப்ப ருடல்விட்டால்
அந்தவுல கந்தனி லரன்சபையில் வாழ்வார்.

பொருள்:

இந்த வளவிய நல்ல சிவபுராணத்தை அன்பு கூர்ந்து வாசிப்பவர்களும், பொருள் சொல்பவர்களும், செவிமடுப்பவர்களும் மனத்தாற் சிந்திப்பவர்களும், இம்மைக்கண் மனம் மகிழப் பூமியைப் பாதுகாப்பர். தேக நீக்கத்தின் கண் அந்தச் சிவலோகத்திலே சிவசந்நிதியில் வாழ்வார்கள். (க. வே)

## திருவாசகச் சிறப்பு

அருள்வாதவூரர் சொல அம்பலவர் தாமெழுதும்
திருவாசகத்தைத் தெளிந்தக்கால் கருவாம்
பகவதியும் நீங்கிப் பரமரருளாலே
சிவகதியும் உண்டாம் சிவம். (1)

கற்பாந்த காலங் கடவர்க் கடல் கடக்கத்
தெப்பமாய் வந்தெனக்குச் சேர்ந்ததே அப்பன்
உருவாசகங் கொண் டுரைத்த தமிழ் மாலைத்
திருவாசகம் என்னும் தேன். (2)

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லல் அறுத் தானந்தம் ஆக்கியதே — எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன். (3)

போதலர்ந்து தேன் சொரியும் பொன்னம்பலத்தி லுறை
வாதவூர் எங்கோமான் வாசகத்தை — ஓதிப்
பிறவிப்பிணி நீக்கிப் பேரின்ப வெள்ளச்
செறிவுக்குள் செல்வர் சிறந்தது. (4)

உ

சிவமயம்

# வினாக்களும் - விடைகளும்.

1) திருவாதவூரடிகள் புராணம் பாடியது யார்?

கடவுண்மா முனிவர்.

2) திருவாசகம் யாரால் பாடப்பெற்றது?

(திருவாதவூரடிகளால்), மாணிக்கவாசகப் பெருமான்.

3) திருவாதவூரடிகளின் தீட்சாநாமம் யாது?

''மாணிக்கவாசகர்''

4) மாணிக்கவாசகரின் பூர்வசன்மத் திருநாமம் என்ன?

"குடமுழா நந்தீசர்'' என்பது
[திருநாவுக்கரசுநாயனுர் தேவாரத்தில் குடமுழா நந்தீசனை மணிவாசகனுகத்தந்தாய்''என்று வருவதனையும் நோக்குக.]

5) திருவாதவூரரின் தாய் தந்தையர் யாவர்?

சம்புபாதாசிரியர், சிவஞானவதி

6) இவர் எங்கே திருவவதாரஞ் செய்தருளினுர்?

பாண்டிநாட்டிலே உள்ள திருவாதவூரிலே அமாத்தியப் பிராமண குலத்திலே திருவவதாரஞ் செய்தருளினுர்.

7) திருவாதவூரர் உரிய வயதை அடைந்ததும் அன்னுருக்கு நடத் தப்பட்ட சடங்குகள் யாவை?

அன்னப்பிராசனம், வித்தியாரம்பம், சிகை (குடுமி) வைத் தல், உபநயனம் (பூணுல் அணிதல்) என்பன.

8) எத்தனை ஆண்டு எல்லைக்குள் திருவாதவூரர் சகல கலைகளிலும் பாண்டித்தியம் பெற்ருர்?

பதினுறு (16) ஆண்டுகால எல்லைக்குள் (பதினுறு வயது முடியுமுன் என்பதே)

9) பாண்டிய மன்னன் திருவாதவூரரை அழைத்து என்ன உத்தியோகம் கொடுத்தான்?

முதன் மந்திரி உத்தியோகம்.

10) பாண்டிய மன்னனால் திருவாதவூரருக்கு என்ன நாமம் வழங்கப்பட்டது?

மற்றைய அரசர்களும் மதிக்கும்படியாக, "தென்னவன் பிரமராயன் என்றருள் சிறந்த நாமம்" வழங்கப்பட்டது. (தென்னவன் பிரமராயன் பாண்டியனது பிராமண வருணத்து முதலதிபதி)

11) முதன் மந்திரி உத்தியோகத்தைப் பெற்றுக்கொண்ட திருவாதவூரரது மனம் யாரை நாடியது?

["தீத்திற வினையினாலே சிறைப்படு முயிரையெல்லாம் - பார்த்தனர் உலக வாழ்வில் பயனிலை யென்றுதேர்ந்து"] பற்றற்ற தொண்டு செய்யவும், ஒரு ஞானசாரியரது திருவடிகளை அடையவும் மனம் நாடியது.

12) ஆரியதேசக் குதிரைகளின் வரவை அறிந்த பாண்டிய மன்னன் திருவாதவூரருக்கு இட்ட பணி யாது?

குறைபாடுகள் இல்லாத குதிரைகள் வாங்கி வருமாறு பணித்தான்.

13) குதிரைகள் வாங்கி வருமாறு கொடுத்த பணம் எவ்வளவு?

நாற்பத்தொன்பது கோடி பொன்.

14) திருவாதவூரருக்குத் தீட்சை அளித்து ஆட்கொள்ள விரும்பிய இறைவன் என்ன செய்தார்?

அடியார்கள் புடைசூழத் திருப்பெருந்துறை சென்று குருந்த மர நிழலிலே ஞானாசாரியத் திருமேனிகொண்டு வீற்றிருந்தருளினார். 'குருந்தடி பொருந்தி யந்த முதல் இல்லவர் அருட்டமிழ் உரைப்பார் - பந்தமறு மெல்லையது பார்த்தினி திருந்தார்'' அதாவது ஆதியந்தம் இல்லாத பரமாசாரியர் அருட்பாவாகிய திருவாசகத்தைப் பாடியருளும் திருவாதவூரடிகளது பாசக் கட்டறுங்கால வரையறையை முற்பிற் பாடற எதிர்நோக்கி இருந்தருளினார்.

15) குதிரை வாங்குவதற்காகப் புறப்பட்டுச் சென்ற திருவாதவூரர் திருப்பெருந்துறையை அண்மித்ததும் அவரது காதிலே கேட்ட ஒலி யாது?

சிவகாம ஒலி (வேதமந்திரங்களின்) கேட்டது.

16) வேத ஒலி கேட்டதும் திருவாதவூரர் என்ன செய்தார்?

தன்னுடன் வந்த பரிவாரங்களை அவ்விடத்திலே நிறுத்தி விட்டு ஞானசாரியரிடம் சென்று வணங்கினார்.

17) ஞானசாரியரிடம் முதலாவதாகக் கேட்ட கேள்வி என்ன?

"சுவாமி! உங்கள் கையில் இருக்கும் புத்தகத்தின் பெயர் யாது?" என்பதாகும்.

18) ஞானசாரியர் என்ன பதில் கூறினார்?

"பொய்மையிலாச் சிவஞானபோதம்" என்றார்.

19) திருவாதவூரர் ஞானசாரியரிடம் சிவஞான போதத்துக்கு விளக்கம் கேட்டபோது அவர் கூறிய பதிலைச் சுருக்கித் தருக.

சிவமாவது உலகத்தை இயக்கும் முதல்வர். அவரை அருள் வழி நின்று உள்ளவாறு அறிதலே ஞானம். போதமாவது அறிந்ததனை அநுபூதியில் வைத்து நிச்சயம் செய்தல் என்பதாகும்.

20) ஞானசாரியர் கூறிய விளக்கத்தைக் கேட்டதும் திருவாதவூரர் என்ன செய்தார்?

தமக்குத் தீட்சை அளித்து ஆட்கொள்ளுமாறு வேண்டினார்.

21) திருவாதவூரரின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட ஞானசாரியர் என்ன செய்தார்?

தீட்சை மண்டபமும் ஆசனமும் அமைக்குமாறு தலைமைத் தொண்டரிடம் கட்டளையிட்டார்.

22) திருவாதவூரருக்கு எவ்வாறு தீட்சை அளிக்கப்பட்டது?

ஞானசாரியர் தீட்சை மண்டபத்தின் கண்ணேஆசனத்தில் அமர்ந்தார். வாதவூரரால் முதலில் பாதபூசை பண்ணப் பட்டது. அதன்மேல் நைவேதனப் பொருட்கள் படைக் கப்பட்டன. ஞானசாரியர் அதனை உட்கோண்டு கைகளைச்

சுத்தி செய்த பின்னர் திருவாதவூரர் மலர்களை ஏந்திய கைகளுடன் ஞானசாரியர் முன்னிலையில் அமர்ந்தார். ஞானசாரியர் முதலில் கிருபா நோக்கஞ் செய்தலாகிய சட்சு தீட்சையும் பின்னர் மந்திரோபதேசஞ் செய்தலாகிய வாசிக தீட்சையும் செய்தருளினர். மூன்றுவதாக ஞான சக்தி, கிரியாசக்தியாகிய இரு திருவடிகளையும் சிரசிலே சூட்டுதலாகிய திருவடி தீட்சையும் செய்தருளினர்.

23) இறுதியாகத் திருவாதவூரருக்கு எவற்றை எடுத்துரைத்தார்?

ஞானசாரியர் திருவாதவூரரைப் புறம்பாக இருத்திச் சித்தாந்தப் பொருட்களையும், நான்கு பாதங்களின் தன்மைகளையும் எடுத்துரைத்தார், (நான்கு பாதங்கள் (i) சரியை (ii) கிரியை (iii) யோகம் (iv) ஞானம்)

24) பக்தி மேலிட்ட திருவாதவூரர் செய்த செயல் என்ன?

தாம் குதிரை வாங்கக் கொண்டு வந்த நாற்பத்தொன்பது கோடி பொன்னையும் ஞானசாரியரின் பாதங்களில் வைத்து வணங்கினர்.

25) ஞானசாரியர் அப்பணத்தை யாது செய்தார்?

தரும கைங்கரியங்களுக்குச் செலவிடுமாறு ஏனைய அடியார்களிடம் பணித்தார்.

26) திருவாதவூரரின் மனோநிலை எவ்வாறு ஆனது?

திருவாதவூரர் ஞானசாரியரை அன்புடன் நோக்கி நிற்பர். அழுவர், தொழுவர் வீழ்வர். இன்புற எழுவர் பின்புறமாக ஏகுவர். இரங்கி மீள்வர். பகல் — இரவு என்ற வித்தியாசம் தெரியாது ஞான நல்லறிவு வரப் பெற்ற பித்தர் போலானர்.

27) திருவாதவூரடிகள் இறைவனகிய ஞானசாரியரினல் ஆட்கொள்ளப் பட்டபின் அவருடைய வெளித் தோற்றம் எவ்வாறு அமைந்திருந்தது?

உருத்தெரியாத நீறும் கோவணவுடையுங் குஞ்சி (தலைமயிர்) விரித்துள சிரமும் தூநீர் மிகப் பொழி விழியுமானர்.

அதாவது அரசனைப் போன்று அழகிய முத்துச்சிவிகையில் வந்த திருவாதவூரடிகள் — இப்போது திருமேனி நிறையப் பூசிய விபூதியும் கௌபீன உடையும், மயிர் விரிக்கப்பெற்ற

சிரசும்,ஆனந்த பாஷ்பம் பொழிகின்ற கண்களையும் உடையவராயினர்.

28) இந் நிகழ்வுகளைக் கண்ணுற்ற சேனுவீரர்கள் யாது செய்தனர்?

பாண்டிய மன்னனிடம் சென்று திருவாதவூரர் கபடதாரிகளிடம் பணத்தைக் கொடுத்து விட்டுத் தாமும் அங்கே நிற்பதாகக் கூறினுர்கள்.

29) பாண்டிய மன்னன் அதற்கு யாது செய்தான்?

உடன் புறப்பட்டு வருமாறு (கடிதம்) திருமுகவோலை அனுப்பினுன்,

30) திருவாதவூரர் திருமுகவோலையைக் கண்டதும் யாது செய்தார்?

அத்திருமுகவோலையை ஞானுசாரியரிடம் காண்பித்தார்.

31) ஞானசாரியர் அதற்கு எவ்வாறு கட்டளையிட்டார்?

பாண்டிய மன்னனிடம் செல்லுமாறும் ஆவணி மூல தினத்திலே தாமே குதிரைகளைக் கொண்டு வருவதாகவும் கூறிக் கையுறையாக மாணிக்கக்கல் ஒன்றையும் கொடுத்து அனுப்பினுர்.

32) பாண்டியனிடம் திருவாதவூரர் கூறியது என்ன?

ஆவணி மூல தினத்திலே குதிரைகள் வரும் என்று கூறினுர்.

33) பாண்டிய மன்னன் என்ன செய்தான்?

கோபந்தணிந்து குறிப்பிட்ட தினத்தை எதிர்நோக்கியிருந்தான். திருவாதவூரர் கொடுத்த மாணிக்கக் கல்லைப் பெற்று மகிழ்ந்தான்.

34) இதன் மேல் நடந்த நிகழ்ச்சி யாது?

குதிரைகள் வரவேண்டிய தினத்திற்கு முதல் தினம் பாண்டியனுல் அனுப்பப்பட்ட தூதுவர்கள் திருப்பெருந்துறை முதலாய இடங்களுங்குச் சென்று பார்த்தபோது குதிரைகள் கொண்டுவரப்படவில்லை என்பதனை அறிந்தனர்.

35) இதனை அறிந்த பாண்டிய மன்னன் யாது செய்தான்?
கோபங்கொண்டு திருவாதவூரரைச் சிறையில் அடைக்கும் படி கட்டளையிட்டான்.

36) சிறையில் அடைக்கப்பட்ட திருவாதவூரர் என்ன செய்தார்?
சிறையில் இருந்த பிரகாரம் தம்மை ஆட்கொண்ட ஞானசாரியருக்கு முறையிட்டார்.

37) ஞானசாரியர் அதற்கு என்ன செய்தார்?
காட்டில் உள்ள நரிகளைக் குதிரைகளாகவும், தேவர்களைக் குதிரை வீரர்களாகவும் உருமாற்றினர். தாமும் ஆரிய தேசக் குதிரை வீரர் போல் உருமாறினர். குறித்த தினத்திலே குதிரைகள் கொண்டு வரப்பட்டன.

38) குதிரை ஏற்றம் நடைபெற்ற போது என்ன நடந்தது.
பாண்டிய மன்னன் குதிரை வீரருக்குப் பீதாம்பரம் ஒன்றைப் பரிசாகக் கொடுத்தான்.

39) பீதாம்பரத்தை இறைவனுகிய குதிரை வீரன் எவ்வாறு பெற்ருர்?
எம்பரமர் செண்டின் மிசை ஏற்றுப் பாண்டிய மன்னனைப் பார்த்துச் சிறுநகை செய்தார்.

40) குதிரை ஏற்றத்தின் பின் நடந்தது என்ன?
குதிரைகள் கயிறு மாறிக் கொடுக்கப்பட்டன. மதுரை நகர் வாசிகள் துயில் கொண்டனர்.

41) நடு நிசியிலே என்ன நடந்தது?
பகலிலே கொண்டு வரப்பட்ட குதிரைகள் யாவும் நரிகளாக மாறிக் காவலாளிகளையும் நகரவாசிகளையும் துன்புறுத்தின.

42) இதனை அறிந்த பாண்டிய மன்னன் என்ன செய்தான்?
திருவாதவூரரை மீண்டும் துன்புறுத்தினன்.

43) திருவாதவூரர் யாது செய்தார்?
சிறையில் இருந்தவாறே தமது துன்பங்களை இறைவனுக்கு இவ்வாறு முறையிட்டார்.

"தொல்லையோரிருவர் தேடுஞ் சோதியே
யாது செய்வேன்
தில்லையோர் பரவநின்ற தெய்வமே
யாது செய்வேன்
இல்லையோ கருணை நின்பால் இன்றெனை
அடிமை கொண்டாய்
அல்லையோ தமியேன் இன்னல் அறிதியோ
அறிந்திலாயோ''

பொருள்: ''பிரமவிஷ்ணுக்களாலும் தேடியறியப்படாத செஞ்சோதிவடிவை உடையவரே! யாது செய்வேன்! தில்லை வாழந்தணர்கள் வழிபடச் சதாகாலமும் நிருத்த தரிசனங் கொடுத்துக் கனகசபையின் கண்ணே நின்று அருளுகின்ற சுவாமீ! தமியேன் இதற்கு யாது செய்வேன்! தமியேனை அடிமை கொண்டீரல்லீரோ? தமியேனது இத் துன்பத்தை அறிந்தீரோ அல்லது அறியா தொழிந்தீரோ என்று விண்ணப்பித்தார்.'' (க. வே)

44) ஞானசாரியராக வந்த இறைவன் திருவாதவூரருக்காக யாது செய்தார்?

தமது சடா முடியிலே தரித்த கங்கையைப் பெருக் கெடுத்து வைகைநதியுடன் சேர்ந்து செல்லுமாறு பணித்தார்.

45) நதி பெருக்கெடுத்து என்ன செய்தது?

கொடிகளைத் தாங்கிய பெரிய மதில் இடியுமாறு தள்ளி அழகிய மதுரை நகரை அழிப்பது போன்று பெருகிப் பக்கத்திலுள்ள இடங்களில் எல்லாம் வைகை நீர் பரவியது.

46) வைகைநதிக்கும் உலகின் கண்ணுள்ள மற்றும் நதிகளுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

நதிகள் எவ்வாற்றானும் சமுத்திரமாகிய தங்கள் நாயகனிடம் சென்று அடையும். ஆனால் வைகைநதி நிலவலயத்து வைகுவ தொன்றாகலின் வைகை எனவும் பெயர் பெற்ற தென்க. பாற்கடலைக் கடைந்த ஞான்று எழுந்த நஞ்சை இறைவனிடம் அளித்ததற்கு எதிர் நோக்குவான் கருதி வைகைநதி அதற்குள் சங்கமிக்காது விட்டது.

47) இறைவன் எதற்காக நதியைப் பெருகச் செய்தார்?

அருட்கண்ணையுடைய சிவபெருமானானவர் பொதுத்தருமங்களுள் ஒன்றாகிய கிருபையினால் மேம்பட்ட திருவாத

வூரடிகள் அநுபவிக்கும் துன்பத்தைத் திருவுளத்தடைத்து அத்திருவாதவூரரிடத்துப் பொருந்திய சகித்தற்கரிய பெருந்துன்பத்தை நீக்கக்கடவை எனப்பணித்தருளினர்.

48) இச்சம்பவத்தை அறிந்த பாண்டிய அரசன் யாது செய்தான்? எதனை உணர்ந்தான்?

திருவாதவூரரைச் சிறையினின்றும் விடுவித்து வைகைநதி மதுரையை அழியாதவாறு தவமுதல்வனே அணையைக் கட்டுவியும் என்று வேண்டினன். வேண்டிப் பின் சற்பாத் திரமாகிய அடியார் கையில் கொடுக்கப்பட்ட திரவியம் நம்முடையதேயானல் அதனல் வரும் அறம் பிறர்க்கு ஆவது உண்டோ இது தெரியாது மயங்கி யான் உமக்கு இழைத்த இத்தண்டமே அநீதியுடைத்து என்று இரங்கி நின்ருன் தமிழ்மாறன்.

இதனை விளக்கும் திருவிருத்தம்

பாம்பணி செய்யவேணிப் பரம்பரன்
அடியார் கையில்
ஆம் பொருள் நமதேயானல் அறம் பிறர்க்
காவதுண்டோ
தேம்படும் அலங்கண் மார்பீர் செயலிதற்
குமதுமேனி
சாம்பிய தவமே யான் செய்தண்டமே
தகவிலாமை.

(மண் சுமந்த சருக்கம் — 13)

49) திருவாதவூரர் யாது செய்தார்?

வைகைக் கரையை அடைத்து மதுரா புரியை அழியா திருக்குமாறு ஞானசாரியாரை வேண்டினர்.

50) இதன் பிறகு என்ன நடந்தது?

வைகையின் பெருக்குக் குறைந்தது. திருவாதவூரரின் மேற் பார்வையில் கரை அடைக்கும் வேலைகள் நடைபெற்றன. நகரவாசிகள் அனைவருக்கும் ஒவ்வொரு பங்கு வீதம் பகிர்ந்து கொடுக்கப்பட்டது.

51) அடைபடாமல் இருந்த பங்கு யாருடையது?

செம்மனச்செல்வி (வந்தி) என்னும் அம்மையாருடையது.

52) செம்மனச் செல்வியார் எவ்வாறு சீவிப்பவர்?

பிட்டு விற்றுச் சீவிப்பவர்.

53) செம்மனச்செல்வி கூலியாள் வேண்டும் என்று யாரிடம் எவ்வாறு முறையிட்டார்?

நெட்டவரக் கச்சுடையாய், செஞ்சடையாய், பிட்டினை விற்று உண்பவளாகிய எனக்கு இடும்பை வந்துளதே யாருடன் இனிப்புகல்வேன். உனதருள் சிறிது போதும் நீயருளா தொழியின் உயிர் நீப்பேன். இதனைவிட யாது செய்வேன் என்று மதுரைச் சொக்கநாத சுவாமியிடம் முறையிட்டாள்.

54) மதுரைச் சொக்கநாத சுவாமி என்ன செய்தார்?

செம்மனச்செல்வி மேல் இரக்கங் கொண்டு மண் எடுக்கும் கூடையும் மண்வெட்டியும் சுமந்து கொண்டு கூலியாளராக அம்மையாரது முன்னிலையில் காட்சியளித்தார்.

55) செம்மனச்செல்வி - கூலிக்காகப் பிட்டுத்தான் என்னிடம் உண்டு - என்று கூறியபோது - இறைவனுகிய மதுரைச் சொக்கநாதர் யாது உரைத்தார்?

அம்மே! இரும்பசியுடையேன் இனிய பிட்டை முதல் அளிப்பையாகில் பசியாறியபின் "கோலஞறை முழுதும் யானே அடைப்பேன்" என்றார்.

56) கூலியாளராகிய சிவபெருமான் வைகைக் கரையை எவ்வாறு அடைத்தார்?

பிட்டினை உண்பார். பின்னர் சிறிது மண்ணைக் கரையிலே போடுவார். பின்னர் பிட்டு நன்ருயிருக்கிறது என்று கையைக் கொட்டுவார். அதன்மேல் கொன்றை மரநிழலிலே நித்திரை செய்வார்.

57) கூலியாளர் பிட்டினை எவ்வாறு அருந்தினர் என்பதைக் கூறும் பாடல் எது?

பிட்டினை நுகர்வன் ஐயா பெரிது
நன்றென்று கையைக்
கொட்டுவன் செய்கை காணில்
அரசிளங்குமரன் ஒப்பான்

நெட்டலர்க் கொன்றை நீழல்
நெடுந்துயில் கொள்கின்முன் நம்
கட்டுரை சிறிதும் கேளான் அவன்
தனைக் காண்மின் என்முர்.

58) கூலியாளரின் செய்கையைக் கண்ணுற்ற அதிகாரிகள் யாது செய்தனர்?

சிவபெருமாணுகிய கூலியாளரை அழைத்து வந்து பிரம் பினுல் அடித்தார்கள்.

59) அடித்ததும் என்ன நடந்தது?

கூலியாளராகிய சிவபெருமான் மறைந்தருளினுர். அடித்த அடி சகல சீவராசிகள் மேலும் பட்டது.

60) நடந்த அற்புதங்களைக் கண்டு கலங்கிய பாண்டிய மன்னன் திருவாதவூரடிகளிடம் இரந்து நின்று தங்கட்கு யாது செய்ய லாம் என்றபோது அவர் யாது கேட்டனர்?

திருப்பெருந்துறைக்கு ஏக என்னை விடுவிப்பது ஒன்றே வேண்டும் என்முர்.

61) மந்திரி உத்தியோகத்தினின்றும் விடுபட்டு திருவாதவூரர் யாது செய்தார்?

திருப்பெருந்துறை சென்று ஞாஞசாரியரை வணங்கினுர்.

62) ஞாஞசாரியர் திருவாதவூரருக்கு இட்ட பணி யாது?

வந்த காரியங்கள் நிறைவேறி விட்டன. நாம் கயிலை செல்ல வேண்டும். நீ இவ்விடம் அடியார்களுடன் சில காலம் தங்கியிருந்து கைலையைத் தரிசித்தபின் நமது பாதங் களை அடைவாய் என்று அருளிச் செய்தார்.

63) திருவாதவூரடிகள் போன்று தகுதிவாய்ந்த அடியார்களுக்கு அருள்புரிதற்காகக் குருவடிவில் எழுந்தருளும் இறைவன், உச்ச நிலை எய்திய திருவாதவூரருக்கு உடனே வீடு பேற்றை அரு ளலாம், எனினும் அங்ஙனம் செய்யாமல் விடுத்தது யாது காரணம் பற்றி?

நல்ல நிலைக்கு வந்த பிள்ளைகளைக் கொண்டே இளைய பிள் ளைகளுக்கு வேண்டும் ஆக்கத்தைத் தேடிக்கொள்ளும் பெற் ருேர் போல், ஆட்கொள்ளப்பட்ட ஓர் உயிரைக் கொண்டே

உலகப்பற்றில் கிடந்துழலும் உயிர்களைத் தன்னிடம் இறைவன் திருப்புகிறான். இது போன்று மலங்களுள் அழுந்திக் கிடக்கும் எம்பொருட்டே வீடு பேற்றை உடனே அருளா நின்றார். (மாணிக்கவாசகர் சபை — காரைநகர்)

64) ஞானாசாரியர் தம்முடன் வந்த அடியார்களுக்கு இட்ட கட்டளை யாது?

"நீவிர் இவ்விடம் சில காலம் தங்கியிருந்து இத்தடாகத்திலே அக்கினி தோன்றும் போது அதிலே அனைவரும் மூழ்கிக் கணநாத வடிவத்துடன் நமது உலகை அடைவீர்களாக" என்று கூறினார்.

65) இதன் மேல் திருவாதவூரர் யாது செய்தார்?

"நமச்சிவாய வாழ்க" என்ற சிவபுராண அடியை முதலாகக் கொண்டு திருவாசகம் பாடத் தொடங்கினார்.

66) தொடர்ந்தும் திருவாதவூரர் ஆலயங்களுக்குச் சென்று என்ன செய்தார்?

ஞானாசாரியரின் கட்டளைப் பிரகாரம் ஆலயங்கள் தோறும் சென்று கீர்த்தித் திருவகவல், திருவண்டப்பகுதி, போற்றித் திருவகவல், திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம், திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி ஆகியன வற்றையும் மேலும் பல ஞான விளக்கங்களை உள்ளடக்கிய திருவாசகப் பாடல்களையும் ஓதி வழிபட்டார்.

67) இறுதியாகத் தங்கியிருந்த தலம் எது?

சிதம்பரத்தை வழிபட்டு அங்கேயே தங்கியிருந்தார்.

68) திருவெம்பாவை எங்கே எதற்காகப் பாடப்பட்டது?

மார்கழி மாதத் திருவாதிரைக்கு முந்திய பத்து நாட்களும் மாணிக்கவாசக சுவாமிகள் திருவண்ணாமலையில் தங்கியிருந்தார். விடியற்காலையில் மகளிர் நோன்பு நோற்றலைக் கண்டார். வீட்டை மெழுக்கிட்டு அங்கு விளக்கேற்றி, வீதி வழிச் சென்று தோழியரை அழைத்துப் புனலாடிப் பாடி மகிழ்ந்த அவர்களின் நிறைவு உதடுகள் வழி தவழ்ந்ததைக் கண்டார். அவர்கள் பாடுவதாகத் திருவெம்பாவையைப் பாடியருளினார்.

69) திருப்பள்ளியெழுச்சி எங்கே அருளப்பட்டது?

திருப்பெருந்துறையில் அருளப்பட்டது.

70) திருவாதவூரர் சிதம்பரத்திலே தங்கியிருக்கும் போது ஈழ நாட்டிலே என்ன நிகழ்ச்சி நடந்தது?

ஒருதபோதனர் புத்த அரசனுடைய மாளிகைக்குச் சென்று "பொன்னம்பலம் நீடூழி வாழ்க" எனக் கூறிக் கொண்டு இருந்தார்.

71) அரசனது அவையிலே இருந்த புத்தகுருமார் தபோதனரைப் பார்த்து நீர் கூறிய சொல்லின் பொருள் யாது? என்று வினவினர்கள். அதற்குத் தபோதனர் கூறிய விளக்கம் யாது?

சிதம்பரத்தின் பெருமைகளோ அளவிட்டுக் கூறமுடியாதவை. ஒருதரம் "பொன்னம்பலம்" என்று கூறினலே நாம் செய்த பாவங்கள் அனைத்துப் நீங்கும் எனப்பகர்ந்தார்.

72) தபோதனரின் வார்த்தையைக் கேட்ட புத்தகுருமார் யாது செய்தார்கள்?

சிதம்பரஞ் சென்று அங்குள்ள அறிஞர்களுடன் சமயவாதஞ் செய்து அதிலே வெற்றி பெற்றுத் தமது புத்த கடவுளையே அங்கு ஸ்தாபிப்பேன் எனக்கூறிக் கொண்டு தில்லை நோக்கிப் புறப்பட்டார்கள்.

73) புத்த குருமார் சென்ற பின் வேறு யார் யார் சென்ருர்கள்?

புத்த அரசனும், அவனுடைய மகள், ஊமைப் பெண்ணும் சென்ருர்கள்.

74) சிதம்பரஞ் சென்ற புத்தகுருமார் தில்லைவாழ் அந்தணர்களிடம் யாது கூறினர்கள்?

தம்முடன் சமயவாதஞ் செய்வதற்கு வருமாறு கூறினர்கள்.

75) தில்லைவாழ் அந்தணர்கள் கூறிய பதில் என்ன?

ஓர் தினம் அங்கே தங்கியிருக்குமாறும் மறுதினம் சோழ இராசா முதலாய பெரியோர்களது சபையிலே சமயவாதம் செய்வதாகவும் கூறினர்கள்.

76) அன்று இரவு தில்லைவாழ் அந்தணர்கள் துயில் கொள்ளும் போது கனவிலே தோன்றிய நடராசப்பெருமான் யாது கூறினர்?

சிதம்பரத்தின் தெற்குப் பக்கத்திலே திருவாதவூரர் தங்கி இருப்பதாகவும் அவரை அழைத்துப் புத்தகுருவுடனே வாதஞ் செய்யுமாறு கூறியருளினர்.

77) மறுநாள் என்ன நடந்தது?

திருவாதவூரர் அழைத்து வரப்பட்டார். சோழ இராசா முதலாய அறிஞர் பெருமக்கள் யாவரும் வந்து கூடினர்கள்.

78) சபை கூடியதும் வாதவூரர் புத்தகுருவிடம் என்ன கேட்டார்?

புத்தகுருவே! நீ இவ்விடம் வந்த காரணம் யாது என்று கேட்டார்?

79) புத்தகுரு கூறிய பதில் என்ன?

எங்கள் புத்த கடவுளே உண்மையான கடவுள் என்பதை இவ்விடத்திலே நிரூபித்துத் தில்லையிலே புத்தரை வைக்க விரும்பி வந்தேன் என்றார்.

80) திருவாதவூரர் இரண்டாவதாகக் கேட்ட கேள்வி என்ன?

உனது கடவுளின் இயல்புகளையும், ஆன்மாக்கள் கடவுளின் அடியில் சேரும் தண்மையையும் சொல்லுவாயாக என்று கேட்டார்?

81) புத்தகுரு கூறிய விளக்கம் என்ன?

நமது கடவுள் நல்லபிடக நூலை ஓதி உயிர்களிடத்தே அன்புடையவனய், யோனிதோறும் பிறந்து நான்கு குற்றங்களையும் நீக்கி அரசமர நிழலிலே வீற்றிருப்பார் என்றார்.

82) இதன்மேல் திருவாதவூரர் புத்தகுருவைப் பார்த்துப் பின் வரும் வினக்களை வினவினர்.

(அ) உன்னுடைய பிடக நூலிலே தருமம் உண்டு என்று கூறினய்? சொல்லும் பொருளும் தேடிச் செல்லு முன்னே அறிவு குன்றினல் உனது கடவுள் ஞான நூலை எவ்வாறு சொல்லுவார்?

(ஆ) உனது கடவுள் ஒரு உயிரையும் கொல்லமாட்டார் என்றாய். அவர் யோனிகள் தோறும் பிறக்கும் போது புலியாகவும் நரியாகவும் பிறந்தால் இலைகளையும் புல்லையுமா உனது கடவுள் உண்பார்.

(இ) பஞ்சகந்தங்களும் அழிதலே முத்தி என்று சொல்லும் பேரறிவில்லாத உன் பிடக நூலைச் சொன்னவர் யாவர்?

(ஈ) இருபத்தொருவராகச் சொல்லப்படும் உமது புத்த கடவுளர் தம்மைப் பத்து மாதமும் சுமந்து பெற்ற தாயாருடைய உயிரை நீங்கச் செய்து நரகத்திலே விழும் அவர்களோ கடவுள் என்று சொல்லப்படுபவர்கள்.

(உ) உயிரைக் கொல்லுதல் பாவம் என்று உனது பிடக நூலிலே சொல்லுவாய். உயிரைக் கொலை செய்து மாமிசத்தைத் தின்னென்று உன்பசியைத் தணித்தவர் பாவத்தை அடைவது உனக்கு நல்லதோ!

83) திருவாதவூரடிகளது வினாக்களைக் கேட்ட புத்தகுருவானவன் கோபங் கொண்டு எங்களுக்குக் கடவுளும் இல்லை முத்தியும் இல்லை என்றீர்! உமது கடவுள் யார்? முத்தி யாது? சொல்லுவீராக என்றான்.

திருவாதவூரடிகள் சொல்லுவார். எங்கள் கடவுள் கல்லால விருக்ஷத்தின் கீழ் இருந்து உபதேசம் செய்பவர். உமா தேவியாரை வாமபாகத்தில் உடையவர். விபூதியை அணிந்த திருமேனியை உடையவர். கனகசபையின்கண்ணே நடனம் செய்பவர். அவரது பெருமை சொல்லுதற்கு எளிதோ என்றார்.

84) திருவாதவூரடிகள் சிவபெருமானின் பெருமைகளைக் கூறக் கேட்ட புத்தகுரு யாது செய்தான்?

நிறுத்துவீராக என்று கூறிப் பின்வரும் வினாக்களைக் கேட்டான்?

(அ) உமது கடவுள் கல்லால விருக்ஷ நீளலிலே இருந்து தருமம் சொன்னார் என்று சொன்னீர்! அவர் செபமாலையைக் கையில் கொண்டிருத்தல் தமக்கு மேல் ஒரு கடவுள் உண்டு என்று கருதியோ?

(ஆ) தில்லையில் நடனஞ் செய்பவர் என்கிறீர்! தன்னிச்சைப்படி நடனம் செய்பவர்கள் யாரும் உலகத்தில் உண்டோ?

(இ) உமது கடவுள் திருநீற்றை மேனியில் பூசுகின்றவர் என்று சொல்லுகின்றீர்! தமது உடம்பிலும் பார்க்க விபூதி பரிசுத்தமான தென்றோ அணிந்துள்ளார்?

(ஈ) உமாதேவியாரை வாமபாகத்தில் உமது கடவுள் வைத்துள்ளார் என்று கூறினீர்! பாதி உடம்பு பெண் வடிவாக உள்ளவர்கள் யாரும் இந்த உலகத்தில் உண்டோ? உமது கடவுள் பாதி பெண் வடிவாக இருக்க நீவிர் துறவு பூண்டது நியாயமாகுமா?

85) புத்தகுருவின் வினாக்களுக்குத் திருவாதவூரர் எவ்வாறு விடை பகர்ந்தார்?

(அ) எமது கடவுள் செபமாலையைக் கையில் கொண்டிருத்தல் உலகத்தவர் தவங்கள் செய்க எனக்காட்டுவதற்கு என அறிந்துகொள்வாய். படைக்கலம் பழக்குவோர் கையில் பிடித்த படைக்கலத்தைப்போலாகும் என்று அறிந்துகொள்.

(ஆ) எம் கடவுள் விபூதியை அணிவது ஏன் என்றாய் உயிர்களின் பிறவித் துன்பத்தை நீக்குவதற்கேயாகும். விறகிலே செறிந்திருக்கும் நெருப்பைப்போல உடம்பினுள் இருந்து உயிரை இயக்கும் நடிகர் எமது கடவுள் என்பதை அறிந்து கொள்வாய்.

(இ) வாமபாகத்தில் உமாதேவியாரை வைத்தது குற்றம் என்கிறாய். இன்பத்தைக் கொடுக்கும் பொருட்டுப் போகியாகியும் யோகத்தைக் கொடுக்கும்பொருட்டு யோகியாகியும் எமது கடவுள் விளங்குகின்றார் என்பதை அறிந்து கொள்வாய்.

86) புத்த குருவின் வினாக்களுக்கு விடைபகர்ந்த திருவாதவூரர் அதன்மேல் யாது செய்தார்?

கலைமகளை அழைத்து நீ இவ்வாறு பொய் வார்த்தைகளைப் பேசுவது ஏன்? தக்கனது யாகத்திலே உனது மூக்கு அறுக்கப்பட்டதை மறந்துவிட்டாயோ? சிவபெருமானது அருளை இல்லை என்று கூறும் மூடருடைய நாவைவிட்டுச் சிவன் ஆணைப்படி நீங்குவாய் என்று ஆணை பிறப்பித்தார்.

87) இதன் பிறகு என்ன நிகழ்ந்தது ?

நாமகள் வஞ்சகருடைய நாவை விட்டு அகன்ருள். புத்த குருமார் அனைவரும் பேச முடியாத ஊமர்கள் ஆனுர்கள்.

88) ஈழநாட்டு அரசன் திருவாதவூரரிடம் என்ன வேண்டினுன்?

பேச வல்லவர்கள் ஊமர்கள் ஆயினர். பேசும் சக்தி அற்ற எனது மகளுக்குப் பேசும் வல்லமையைக் கொடுத்தால் யான் உமக்கு நல்ல தொண்டன் ஆவேன் என்ருன்.

89) திருவாதவூரர் ஈழ மன்னனுக்கு என்ன கூறினுர் ?

அரசனது மகளை அழைக்குமாறு கூறினுர்.

90) ஈழ மன்னனுடைய மகள் அங்கே வந்ததும் என்ன நடந்தது?

திருவாதவூரடிகள் அப் பெண்ணுக்குத் திருவருள் புரிந்து முன்னராக இருக்கச் செய்து புத்தகுருமார் கேட்ட விஞக் களுக்கு விடை சொல்லுமாறு பணித்தார். அப் பெண் கற்று அறிந்தவர்களைப்போல் விடைகூறினுள். இந் நிகழ்ச் சியைத்திருவாதவூரர் "திருச்சாழலாக"த் திருவாசகத்தில் தந்துள்ளார்.

91) இதன்மேல் ஈழமன்னன் திருவாதவூரரிடம் என்னவேண்டினுன்?

புத்த குருமாருக்கும் பேசும் திறனை அருள வேண்டும் என்று வேண்டினுன் ?

92) ஈழ மன்னனின் வேண்டுகோளைத் திருவாதவூரர் ஏற்றுக் கொண்டாரா ?

ஆம். ஏற்றுக் கொண்டார்.

93) அதன் பின்னர் என்ன செய்தார் ?

புத்தகுருமாருக்கு விபூதி, உருத்திராக்கம் அணிவித்தார். இதன் பின்னர் புத்தகுருமார் பேசுந் திறனைப் பெற் ருர்கள். சைவ சமயத்தை மேற்கொண்டார்கள்,

94) சமய வாதத்துக்கு வந்த அனைவரும் யாது செய்தார்கள் ?

கனக சபையிலே வீற்றிருக்கும் சபாநாயகரையும், திரு வாதவூரடிகளையும் வணங்கிக்கொண்டு தங்கள் தங்கள் இருப்பிடங்களுக்குச் சென்ருர்கள்.

95) திருவாதவூரடிகள் திருக்கோவை பாடியபோது என்ன நடந்தது ?

சிவபெருமானே அந்தணனாக வந்து அவற்றை தமது திருக்கரத்தினால் எழுதினார்.

96) திருக்கோவையாருக்குப் பொருள் கேட்டது யார் ?

சிதம்பரதல வாசிகள்

97) திருவாதவூரடிகள் எவ்வாறு பொருள் கூறினார் ?

இத் தமிழ் மாலைக்கு இவரே பொருள் என்று நடராஜப் பெருமானைச் சுட்டிக் காட்டி, கனகசபையில் மறைந்து பாலுடனே சேர்ந்த நீர் பாலாமாறு போலச் சிவமாம் தன்மையைப் பெற்றார்.

" நின்ற புகழ்ப் புலியூரர் நேயமுடன் புடைசூழச்
சென்றருளுக்கு இடமான செம்பொனின் அம்பலம் எய்தி
ஒன்றிய இத்தமிழ்மாலைப் பொருள்இவர் என்றுரை செய்து
மன்றதனில் கடிதேகி மறைந்தனர் அங்கவர் காண"

98) திருவாதவூரடிகள் புராணம் ஆலயங்களில் எக் காலத்தில் படித்துப் பயன் சொல்லப்படும் ?

மார்கழி மாதத்தில் வரும் திருவெம்பாவை பத்து நாட்களும் படித்துப் பயன் சொல்லப்படும்,

அதாவது மார்கழி மாத – அமாவாசைக்குப் பின்பு வரும் அவிட்டநட்சத்திரத்தில் திருவெம்பாப் பூசை ஆரம்பமாகி பத்தாம்நாள் நடேசர் ஆர்த்திரா அபிஷேகம் நடைபெறும். சிதம்பரத்திலும் காரைநகர் ( ஈழத்துச் சிதம்பரம் ) சிவன் கோவிலிலும் திருக்கேதீச்சரம் முதலிய தலங்களிலும் இவ் விழாசிறப்புற நடைபெறுகின்றன.

" வாதவூர் அந்தணர் தம் திருவாய்மை விளங்கு திருக்கதை
ஓதினர் அன்புடன் ஒண்செவியூடு முகந்து கேட்டவர்
போத மெஞ்ஞான முறும் சுகபோகமுடன் புகழ்பெறுவர்
தீதில்பவங்கள் தொலைந்து பின்சேர்குவர் வண்சிவலோகமே."

99) திருவாதவூரடிகள் பாடிய பாடல்கள் எத்தனையாம் திருமுறைகள் ?

எட்டாம் திருமுறை.

100) திருவாதவூரடிகளது குருபூசைத் தினம் எப்போது ?

ஆனி மாசத்திலே வரும் மக நட்சத்திரமாகும்.

101) திருவாதவூரடிகள்புராணம், திருவிளையாடற் புராணம் ஆகியவற்றிற்கு விரிவுரைகள் எழுதியது யார் ?

உரையாசிரியர், வித்துவசிரோன்மணி ந. ச. பொன்னம்பலபிள்ளையின் முதல்மாணவரும் சிதம்பரத்தின் கண்ணே உள்ள நாவலர் கல்லூரியில் இருபத்துமூன்று வருடகாலம் தலைமை ஆசிரியராக அதிதிறமையோடு கடமை பார்த்தவருமாகிய ஆசிரியர் திரு. ம. க. வேற்பிள்ளை அவர்கள் ஆவார்,

திருச்சிற்றம்பலம்

முற்றும்.

உ

கணபதி துணை

# திருக்குறள்

## அறத்துப்பால்

பாயிரம்

## முதல் அதிகாரம் -- கடவுள்வாழ்த்து.

1. அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

2. கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்று டொழாஅ ரெனின்,

3. மலர்மிசை யேகினுன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

4. வேண்டுதல்வேண் டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில.

5. இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

6. பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்ருர் நீடுவாழ் வார்.

7. தனக்குவமை யில்லாதான் ருள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது.

8. அறவாழி யந்தணன் ருள்சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீந்த லரிது.

9. கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

10. பிறவிப் பெருங்கட லீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்.

## இரண்டாம் அதிகாரம் -- வான்சிறப்பு.

1. வானின் றுலகம் வழங்கி வருதலாற்
றானமிழ்த மென்றுணரற் பாற்று.

2. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை.

3. விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி.

4. ஏரி னுழாஅ ருழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்.

5. கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉ மெல்லா மழை.

6. விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றாங்கே
பசும்புற் றலைகாண்ப தரிது.

7. நெடுங் கடலுந் தண்ணீர்மை குன்றுந் தடிந்தெழிலி
தானல்கா தாகி விடின்.

8. சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு.

9. தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்.

10. நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு.

## மூன்றும் அதிகாரம் :- நீத்தார்பெருமை.

1. ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிவு.

2. துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை யெண்ணிக் கொண் டற்று.

3. இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு.

4. உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து.

5. ஐந்தவித்தா னாற்ற லகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி.

6. செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

7. சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு.

8. நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

9. குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது.

10. அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்.

## நான்காம் அதிகாரம் -- அறன்வலியுறுத்தல்.

1. சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங்
காக்க மெவனோ வுயிர்க்கு.

2. அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு,

3. ஒல்லும் வகையா னறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல்,

4. மனத்துக்கண் மாசில னாத லனைத்தறன்
ஆகுல நீர பிற,

5. அழுக்கா றவாவெகுளி யின்னாச்சொல் நான்கும்
இழுக்கா வியன்ற தறம்.

6. அன்றறிவா மென்னு தறஞ்செய்க மற்றது
பொன் றுங்காற் பொன்றுத் துணை.

7. அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானே டூர்ந்தா னிடை.

8. வீழ்நாள் படாஅமை நன்றாற்றி னஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்,

9. அறத்தான் வருவதே யின்பமற் றெல்லாம்
புறத்த புகழு மில.

10. செயற்பால தோரு மறனே யொருவற்
குயற்பால தோரும் பழி.

# இ ல் ல ற வி ய ல்

## ஐந்தாம் அதிகாரம் -- இல்வாழ்க்கை.

1. இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றி னின்ற துணை.

2. துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கும்
இல்வாழ்வா னென்பான் றுணை.

3. தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லுனென்றாங்
கைம்புலத்தா றோம்ப றலை.

4. பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்ச லெஞ்ஞான்று மில்.

5. அன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கை
பண்பும் பயனு மது.

6. அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்,

7. இயல்பினா னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்
முயல்வாரு ளெல்லாந் தலை.

8. ஆற்றி னொழுக்கி யறனிழுக்கா வில்வாழ்க்கை
நோற்பாரி னோன்மை யுடைத்து.

9. அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்
பிறன்பழிப்ப தில்லாயி னன்று.

10. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும்.

## ஆறும் அதிகாரம் -- வாழ்க்கைத்துணைநலம்

1. மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

2. மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினு மில்.

3. இல்லதெ னில்லவண் மாண்பானா லுள்ளதென்
இல்லவண் மாணாக் கடை.

4. பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்.

5. தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை.

6. தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

7. சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை.

8. பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்பு
புத்தேளிர் வாழு முலகு.

9. புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை யிகழ்வார்முன்
ஏறுபோற் பீடுநடை.

10. மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கல நன்மக்கட் பேறு.

## ஏழாம் அதிகாரம் -- புதல்வரைப் பெறுதல்

1. பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற.

2. எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.

3. தம்பொரு ளென்ப தம்மக்க ளவர்பொருள்
தந்தம் வினையான் வரும்.

4. அமிழ்தினு மாற்றவினிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ்.

5. மக்கண்மெய் தீண்ட லுடற்கின்ப மற்றவர்
சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு.

6. குழலினி தியாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர்.

7. தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்,

8. தம்மிற் றம்மக்க ளறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது.

9. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்.

10. மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
என்னோற்றான் கொல்லெனுஞ் சொல்.

## எட்டாம் அதிகாரம் -- அன்புடைமை

1. அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்
புன்கணீர் பூச றரும்.

2. அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையார்
என்புமுரியர் பிறர்க்கு.

3. அன்போ டியைந்த வழக்கென்ப வாருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு.

4. அன்பீனு மார்வ முடைமை யதுவீனும்
நண்பென்னு நாடாச் சிறப்பு.

5. அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
தின்புற்றா ரெய்துஞ் சிறப்பு.

6. அறத்திற்கே யன்புசார் பென்ப வறியார்
மறத்திற்கு மஃதே துணை.

7. என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை யறம்.

8. அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றன் மரந்தளிர்த் தற்று.

9. புறத்துறுப் பெல்லா மெவன்செய்யும் யாக்கை
அகத்துறுப் பண்பி லவர்க்கு.

10. அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு.

## ஒன்பதாம் அதிகாரம் -- விருந்தோம்பல்

1. இருந்தோம்பி யில்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

2. விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.

3. வருவிருந்து வைகலு மோம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுத லின்று.

4. அகனமர்ந்து செய்யா ளுறையு முகனமர்ந்து
நல்விருந் தோம்புவா னில்.

5. வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சின் மிசைவான் புலம்.

6. செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு.

7. இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன்.

8. பரிந்தோம்பிப் பற்றற்றே மென்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்.

9. உடைமையு ளின்மை விருந்தோம்ப லோம்பா
மடமை மடவார்க ணுண்டு.

10. மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

## பத்தாம் அதிகாரம் -- இனியவை கூறல்

1. இன்சொலா லீர மளைஇப் படிறிலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.

2. அகனமர்ந் தீதலி னன்றே முகனமர்ந்
தின்சொல னாகப் பெறின்.

3. முகத்தா னமர்ந்தினிது நோக்கி யகத்தானாம்
இன்சொ லினதே யறம்.

4. துன்புறூஉந் துவ்வாமை யில்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉ மின்சொ லவர்க்கு.

5. பணிவுடைய னின்சொல னாத லொருவற்
கணியல்ல மற்றுப் பிற.

6. அல்லவை தேய வறம்பெருகு நல்லவை
நாடி யினிய சொலின்.

7. நயனீன்று நன்றி பயக்கும் பயனீன்று
பண்பிற் றலைப்பிரியாச் சொல்.

8. சிறுமையு ணீங்கிய வின்சொன் மறுமையும்
இம்மையு மின்பந் தரும்.

9. இன்சொ லினிதீன்றல் காண்பா னெவன்கொலோ
வன்சொல் வழங்கு வது.

10. இனிய வுளவாக வின்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

+ திருக்குறள் பத்ததிகாரங்கள்மட்டும் முற்றும். +

# பக்தி இலக்கியம் தந்த உதய தாரகைகள் நால்வர்

| பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல் போற்றி | ஆழிமிசைக்கன் மிதப்பில் அணைந்த பிரானடி போற்றி | வாழி திருநாவலூர் வன்றொண்டர் பதம் போற்றி | ஊழிமலி திருவாதவூர் திருத்தாள் போற்றி |
| --- | --- | --- | --- |
|  |  |  |  |
| சம்பந்தர் | அப்பர் | சுந்தரர் | மாணிக்கவாசகர் |

உ
சிவமயம்

அப்பர் சுவாமிகள் தேவாரம்

# திருவங்கமாலை

பண் சாதாரி

திருச்சிற்றம்பலம்

தலையே நீ வணங்காய் - தலை
மாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத்
தலையே நீ வணங்காய்.

கண்காள் காண்மின்களோ - கடல்
நஞ்சுண்ட கண்டன் றன்னை
எண்தோள் வீசிநின் றாடும்பி ரான்றன்னைக்
கண்காள் காண்மின்களோ.

செவிகாள் கேண்மின்களோ - சிவன்
எம்மிறை செம்பவள
எரிபோல் மேனிப்பி ரான்றிறம் எப்போதும்
செவிகாள் கேண்மின்களோ.

மூக்கே நீமுரலாய் - முது
காடுறை முக்கணனை
வாக்கே நோக்கிய மங்கைம ணாளனை
மூக்கே நீ முரலாய்.

வாயே வாழ்த்து கண்டாய் - மத
யானையுரி போர்த்துப்
பேய்வாழ் காட்டகத் தாடும்பிரான்றனை
வாயே வாழ்த்து கண்டாய்.

நெஞ்சே நீ நினையாய் - நிமிர்
புன்சடை நின்மலனை
மஞ்சா டும்மலை மங்கைம ணாளனை
நெஞ்சே நீ நினையாய்.

கைகாள் கூப்பித்தொழீர் - கடி
மாமலர் தூவி நின்று
பைவாய்ப் பாம்பரை யார்த்த பரமனைக்
கைகாள் கூப்பித்தொழீர்.

ஆக்கையாற் பயனென் - அரன்
கோயில் வலம்வந்து
பூக்கை யால் அட்டிப் போற்றியென்னுதவில்
ஆக்கை யாற்பயனென்.


கால்களாற் பயனென் - கறைக்
கண்ட னுறைகோயில்
கோலக் கோபுரக் கோகர ணஞ்சூழாக்
கால்க ளாற்பயனென்.

உற்றா ராருளரோ - உயிர்
கொண்டு போம்பொழுது
குற்றா லத்துறை கூத்தனல் லால்நமக்
குற்றா ராருளரோ.

இறுமாந் திருப்பன்கொலோ - ஈசன்
பல்கணத் தெண்ணப்பட்டுச்
சிறுமா னேந்திதன் சேவடிக்கீழ்ச்சென்றங்
கிறுமாந் திருப்பன்கொலோ.

தேடிக் கண்டுகொண்டேன் - திரு
மாலொடு நான் முகனுந்
தேடித் தேடொணாத் தேவனை யென்னுள்ளே
தேடிக் கண்டு கொண்டேன்.

திருச்சிற்றம்பலம்



வித்துவான்

சி. கணேசையர் அவர்கள்

சைவப்பிரகாச அச்சகம், யாழ்ப்பாணம்.